*1981 ஏப்ரல் 10]*

அந்த நாட்டோடு தொடர்பு கொண்டு அதைப்பற்றி விவரம் ஏதேனும் கிடைத்திருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நகரம் முற்காலச் சோழர் காலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை தொடர்பு கொண்டதாக இருக்கிறது என்பதை அங்கே கிடைத்திருக்கின்ற பொருட்களை வைத்துக் கொண்டும், இதுவரைக்கும் தெரிந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மத்திய காலத்தில் இந்நகரம் கடலால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து இந்த ஆராய்ச்சியினரிடத்தில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேதான் நாம் கடல் அகழ்வாராய்ச்சி செய்யலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.

மேல்நிலைக்கல்வி (+2) தேர்வு

*வினா எண் 730. திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பள்ளியில் சேராமல் தனியாக படித்து மேல்நிலை கல்வி தேர்வு (+2) எழுத அரசு அனுமதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். 10ம் வகுப்பு அல்லது 11-ம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 35 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று வெற்றிபெற்ற 18 வயது கடந்தவர்கள் யாவரையும், செய்முறை தேவையில்லாத கலைப் பாடங்களில் பள்ளியில் படிக்காமல், நேரடியாகக் கல்வித் தேர்வு எழுத அரசு அனுமதித்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செங்கோடன்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு எஸ். எஸ். எல். சி-யிலே ஏற்கனவே குறிப்பிட்ட வயதுக்கு மேல் இருந்தால், பள்ளிகளிலே படித்து இடைக்காலத்திலே விட்டிருந்தாலும் விசேஷ அனுமதி பெற்றுப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுகிறதே, இதைப்போன்று பிளஸ்2 தேர்வையும், பள்ளியிலே படிப்பை இடையிலே விட்டு விட்டிருந்தாலும் பரீட்சைக்குப் பணம் கட்டி பரீட்சை எழுதிப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பில் அல்லது 11ஆம் வகுப்பில் தேறியிருக்க வேண்டும்; 18 வயது முடிந்திருக்க வேண்டும். அவர்கள் பரிசோதனை தேவைப்படாத கலைப் பாடங்களை எடுத்துக் கொண்டு, நேரடியாக எழுதி பாஸ் செய்யலாம்.